**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 145 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW10<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Ankaleeswari. |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07th day of October, 2025.

**(A1 to A6 are present.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது T12 பூந்தமல்லி காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.08.2022 அன்று T15 SRMC காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது T15 SRMC குற்ற எண் 453/2022 வழக்கில் சம்பந்தப்பட்ட கமலா, க/பெ. பழனி என்பவரை காவல் ஆய்வாளரின் உத்தரவுபடி கீழ்பாக்கம் அரசு

மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக ஆஜர் செய்தேன். பின்னர் அவருடைய மருத்துவ பரிசோதனை முடிந்த பிறகு தபாலை எடுத்துக்கொண்டு தடயஅறிவியல் துறையில் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக SRMC ஏ.சி என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

பாதிக்கப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று விபத்து பதிவேடு பதிவு செய்தபிறகுதான் சிகிச்சைக்கு உட்படுத்தினோம் என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேடு 07.08.2022 அன்று பகல் 1.00 மணிக்கு சென்ற உள்ளது என்றால் சரிதான். நான் 1.00 மணிக்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 145 / 2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW11 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Subramanian |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07th day of October, 2025.

**(A1 to A6 are present.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது T15 SRMC காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.08.2022 ஆம் தேதி மேற்படி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபரிந்தபோது ஆய்வாளர் உத்தரவின் படி நானும் PC மணிமாறன் என்பவர் SRMC காவல் நிலைய குற்ற எண் 453/2022 வழக்கில் கண்ட எதிரிகளை ஆண்மை

தன்மை பரிசோதனை செய்ய வேண்டி D.No. 1166 dated 16/08/2022 கனம் நடுவர் குற்றவியல் நீதிமன்றம் நடுவர் எண் 1, பூந்தமல்லி அவர்களின் உத்தரவின்படி எதிரிகள் தினேஷ் மற்றும் கணேஷ் ஆகியோரை புழல் மத்திய சிறைக்கு சென்று அழைத்துக்கொண்டு ஆண்மை தன்மை மருத்துவ பரிசோதனைக்காக KMC மருத்துவமனை, சென்னை கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து வந்து தடயஅறிவியல் துறை உதவி பேராசிரியர் திரு. விஷ்ணுராஜ் குமார் என்பவரிடம் 11.40 மணிக்கு மருத்துவமனையில் பரிசோதனைக்கு உட்படுத்தி 12.05 மணிக்கு பரிசோதனையை முடித்து மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு மத்திய சிறையில் ஒப்படைத்து பின்னர் காவல் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். மேற்படி வழக்கு சம்பந்தமாக ACP அவர்கள் விசாரணை செய்ய நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

குறுக்கு விசரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 145 / 2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW12 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Murugan (I.O). |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07th day of October, 2025.

**(A1 to A6 are present.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது பூந்தமல்லி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் T15 SRMC காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபரிந்து வந்தேன். T15 SRMC காவல் நிலைய குற்ற எண் 453/2022 ல் எதிரிகள் சுபாஷ் வயது 22, த/பெ. வேலு, சந்தோஷ்குமார் வயது 27, இருவரையும் புழல்

மத்திய சிறையிலிருந்து அழைத்துக்கொண்டு நானும், PC 44150 யோகேஷ்வரன் ஆகிய இருவரும் குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண்.1 பூந்தமல்லி D.No. 1166 dated 16/08/2022 படி சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் ஆண்மை தன்மை பரிசோதனை செய்ய வேண்டி மேற்படி எதிரிகள் இருவரையும் புழல் மத்திய சிறையிலிருந்து அழைத்து வந்து சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் தடய அறிவியல் துறை பேராசிரியர் டாக்டர் ரவிக்குமார் அவர்களிடம் சுபாஷ் என்பவரை 11.45 மணிக்கு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு 12.15 மணிக்கு எதிரி சந்தோஷ்குமாரை பரிசோதனையை முடித்து இருவரையும் புழல் மத்திய சிறையில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். AC என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

குறுக்கு விசரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.